இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 14-01-2025

# வளர்ச்சியும் மகிழ்ச்சியும்

தமிழர் தம் இல்லங்களிலும் உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்க வைக்கும் பொங்கல் திருநாள் இது! அதனால்தான் இதனை 'தமிழர் திருநாள்' என்கிறோம்!

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**

**உழந்தும் உழவே தலை** - என்றார் வள்ளுவர். உழைப்பை வாழ்க்கையாகக் கொண்ட மனிதன், தன் உழைப்பின் கீழ் பெறும் பயனைக் கொண்டாடினான் அதுதான் பொங்கல் நாள். அறுவடையில் கிடைத்த முதல் அரிசியை வைத்துப் பொங்கினான். அதாவது சமைத்தான். அதுதான் பொங்கல் திருநாள். சிலப்பதிகாரம், புறநானூறு தொடங்கி அனைத்து இலக்கியங்களிலும் பொங்கல் பொங்குகிறது.

**"தைஇத் திங்கள் தண்கயம் படியும்"** - என்று நற்றிணையும் -

**"தைஇத் திங்கள் தண்ணிய தரினும்"** என்று குறுந்தொகையும் -

**"தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ"** - என்று கலித்தொகையும் சொல்கிறது. இத்தகைய பண்பாட்டின் தொடர்ச்சி பொங்கல் திருநாளுக்கு உண்டு.

பொங்கல் நாளை மகிழ்ச்சியுடன் ஏன் கொண்டாடுகிறோம் என்பதற்கு விளக்கம் அளித்து பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கவிதை தீட்டினார்கள். அதில் உள்ள சில வரிகள் அருமையாக விளக்கம் அளிக்கும்.

ஏன் கொண்டாடுகிறோம் என்பதற்கு அண்ணாவின் கவிதைப் பதில் இது.

**"உழைப்பின் உயர்வைப் போற்றிடும் பண்பு**
**உலகெலாம் பரவிடல் வேண்டு மென்றே**
**விழைவு மிகக் கொண்டோம் அதனால்!**
**காய்கதிச் செல்வனைப் போற்றினர், ஏனாம்?**
**உயிர்கட்கு ஊட்டம் அளிப்பவ னதனால்.**
**உழவர்கள் உயர்வினைப் போற்றிடல் எதனால்?**
**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர் அதனால்.**
**ஆவினம் போற்றினொம். அஃது எதனால்?**
**பரிந்து தீஞ்சுவைப் பால் அளிப்பதனால்!**

எனவே இவ்விழா நன்றி கூறிடும் நல்விழாவாகும்" - என்று எழுதினார் பேரறிஞர் அண்ணா.

"ஒரு கலை விழாவாக, ஒரு பண்பாட்டு விழாவாக தமிழகத்திலே நடத்தப்படுவது பொங்கல் விழா. உழவர் திருநாள் இப்பொங்கல் புதுநாள் என்பதை அனைவரும் அறிந்து போற்றுகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்புவரை சங்கராந்திப் பண்டிகையாகவும், சூரிய நமஸ்காரப் பண்டிகையாகவும் இருந்து வந்த நிலைமாறி, இப்போது அறுவடை விழா என்றும் உழவர் திருநாள் என்றும், தமிழர் விழா என்றும் - திராவிடர் திருநாள் என்றெல்லாம் ஏற்றம் பெற்று விளங்கிடக் காண்கிறோம். எல்லாப் பண்டிகைகளும் நம்மைப் பிற இனத்தாரின் எடுபிடிகளாக்குவதற்கே பெரிதும் பயன்பட்டு வருவது கண்டு பேராசிரியர்கள் பலரும், சிந்தனையாளர்களும் சீர்திருத்தச் செம்மல்களும் தமிழருக்கே உரித்தானதும் தனிச்சிறப்பளிப்பளிப்பதுமான இப்பொங்கல் புதுநாள் மாண்பினை மக்கள் அறிந்திடச் செய்துள்ளனர்"" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதினார்கள்.

'கற்பனைக் கதைகள் இல்லாத விழா பொங்கல் விழா' என்று சொன்னார் தந்தை பெரியார். பொங்கல் விழாவில் கற்பனைகள் இல்லை. உழைப்பு இருக்கிறது. மண்ணும் மக்களும் இருக்கிறார்கள். வியர்வையும் ரத்தமும் இருக்கிறது. மொத்தத்தில் ஒரு இனத்தின் பண்பாடு இருக்கிறது. மகிழ்ச்சி இருக்கிறது. மலர்ச்சி இருக்கிறது.

ஆண்டுதோறும் பொங்கல் கொண்டாடப்படுகிறது. இருந்தாலும் ஆட்சியின் மாட்சியும் வளர்ச்சியும் அதனுள் சேரும் போது மகிழ்ச்சி அதிகரிக்கவே செய்யும். அந்த வகையில் பார்த்தால் சில ஆண்டுகளாக மக்கள் இன்னும் கூடுதல் மகிழ்ச்சியோடு இத்திருநாளைக் கொண்டாடி வருகிறார்கள். இதனைத் தான், "இல்லத்தில் மகிழ்ச்சிப் பொங்கல்! மாநிலத்தில் வளர்ச்சிப் பொங்கல்!" என்று சொல்லி இருக்கிறார்கள்.

**ஒவ்வொரு திட்டமும் கோடிக்கணக்கான மக்களை மகிழ்விக்கும் திட்டங்களாக அமைந்துள்ளன. "ஆறாவது முறை ஆட்சி அமைந்த போது, அது விடியல் ஆட்சியாக அமையும் என்றோம். நான் செல்லுமிடமெல்லாம் கூடும் மக்களின் முகங்களில் காணும் மகிழ்ச்சிதான் விடியலின் அடையாளம். மாதம் தோறும் ஒரு கோடியே 17 லட்சம் மகளிர் சகோதரிகள் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையைப் பெறுகிறார்கள். அக்கவுண்டில் அவர்கள் கணக்கில் ஆயிரம் ரூபாய் போய்விழும் போது அவர்களது முகத்தைப் பாருங்கள் அதில் தெரியும் இதான் விடியல் ஆட்சி என்று! தாய் வீட்டுச் சீரைப் போல் - எங்கள் அண்ணன் ஸ்டாலின் தரும் மாதாந்திரச் சீர் என்று என்னரும் தமிழ்ச் சகோதரிகள் வாய் மணக்கச் சொல்கிறார்கள். அதுதான் விடியல் ஆட்சிக்கான ஆதாரம்"** என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்படி ஒவ்வொரு திட்டத்தின் மூலமாகவும் பல்லாயிரம் - பல லட்சம் மக்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணம் மூலமாக பெண்ணினம் முழுவதும் - புதுமைப் பெண் திட்டம் மூலமாக மாணவியரும் - தமிழ்ப் புதல்வன் திட்டம் மூலமாக மாணவர்களும் - நான் முதல்வன் திட்டம் மூலமாக தமிழ்நாட்டு இளைஞர்களும் - காலை உணவுத் திட்டம் மூலமாக பள்ளி மாணவ மாணவியரும் - சுய உதவிக் குழுக்கள் மூலமாக பெண்களும் - தொகுப்புதவிகள் மூலமாக வேளாண் மக்களும் - பல்வேறு சலுகைகள் மூலமாக ஊழியர்களும் பணியாளர்களும் பயனடைந்து வருகிறார்கள். அவர்கள் மனங்களில் மகிழ்ச்சி பொங்கி வருகிறது.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திட்டம். ஒவ்வொரு திட்டமும் பலதரப்பட்ட மக்களையும் மகிழ்வித்து வருகிறது. அனைத்து திட்டங்களும் மக்களுக்கு கரும்பாக இனிக்கிறது.

**"முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான் தமிழ்நாட்டை மேம்படுத்தும் தொண்டை மேல் போட்டுக் கொண்டு அதே பணியாக இருப்பவன். இதைத் தவிர எனக்கு வேறு பணிகள் இல்லை. நவீனத் தமிழ்நாட்டை இந்தியாவில் முதன்மை மாநிலமாக - முன்னோடி மாநிலமாக உயர்த்திக் காட்டுவேன்."** என்ற உறுதிமொழி கோடிக்கணக்கான மக்களின் மனங்களில் பால் வார்த்துள்ளது. மக்கள் மனங்களில் மகிழ்ச்சி பொங்குவதால், பானைகளில் பொங்கல் பொங்குகிறது.

**'வளர்ச்சியே மகிழ்ச்சியாகி பொங்குகிறது. பொங்கட்டும். பொங்கலோ பொங்கல்' என்று முரசொலித்துச் சொல்வோம்!**



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.1.2025) அவரது முகாம் அலுவலகத்தில், 'முரசொலி' பொது மேலாளர் எஸ்.இராஜசேகரன், செய்தியாசிரியர் கு.சேது ஆகியோர் சந்தித்து – 'முரசொலி' தயாரித்து வழங்கும் தைத்திங்கள் முதல்நாள் – தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் சிறப்பு மலர் – 2025'ஐ வழங்கி வாழ்த்துப் பெற்றனர்.



வேலூர் மாங்காய் மண்டி அருகே அரசு பொருட்காட்சியை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கழகப் பொதுச் செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வழங்கினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மண்டலக் குழுத் தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, காட்பாடி ஒன்றியக் குழுத் தலைவர் வேல்முருகன், மாமன்ற உறுப்பினர்கள் சி.சந்திரசேகர், காஞ்சனா கிருஷ்ணமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## சேலத்தில் கால்நடை – விலங்கின அறிவியலுக்கான

# ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜன. 14-**

**சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்ரோடு பகுதியில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் ரூ.564.44 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.1.2025) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில் சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்ரோடு பகுதியில் 1102.25 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.564.44 கோடி செலவில், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தையும், அதில் அமைக்கப்பட்டுள்ள நிர்வாகக் கட்டடம், நுழைவு வாயில் வளைவுகள், விருந்தினர் விடுதி மற்றும் 9 வளாகங்களையும், அதனைச் சார்ந்த 126 கட்டடங்களையும் திறந்து வைத்தார்.

கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கும் கால்நடைகளை நன்கு பராமரித்திடவும், மேம்பட்ட தரமான மருத்துவச் சிகிச்சைகளை கால்நடைகளுக்கு அளிக்கவும், இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்திடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு ஆக்கப்பூர்வமான திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது.

**கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையம்!**

சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்ரோடு பகுதியில் 1102.25 ஏக்கர் நிலப்பரப்பில் 564.44 கோடி ரூபாய் செலவில், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தை முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

இந்த ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தில், நிர்வாக அலுவலகம், விருந்தினர் மாளிகை மற்றும் நுழைவு வாயில், கால்நடை பண்ணை வளாகத்தில் நாட்டின மாடுகள் பிரிவு, வெள்ளாடுகள் பிரிவு, செம்மறியாடுகள் பிரிவு, நாட்டு கோழியின பிரிவுகள், நவீன குஞ்சு பொரிப்பகம், கோழித்தீவன உற்பத்தி ஆலை ஆகியவையும், மீன்வளர்ப்பு செயல்முறை வளாகத்தில் மறுசுழற்சி முறையில் தீவிர மீன்குஞ்சுகள் உற்பத்தி பிரிவு, அலங்கார மீன் வளர்ப்பு பிரிவு, மீன் கழிவுகளை பயன்படுத்தி காய்கறி உற்பத்தி செய்யும் பிரிவு ஆகியவையும், நிர்வாகக் கட்டடம், வகுப்பறை கட்டடங்கள், ஆய்வகங்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கான விடுதியுடன் கூடிய முதுநிலை கல்வி மையம், விரிவாக்கம் மற்றும் திறன் மேம்பாட்டு வளாகத்தில் நவீன பயிற்சி வளாகம், ஒருங்கிணைந்த மாதிரி கால்நடை பண்ணைகள், கால்நடை மருத்துவ அலுவலர்கள் விடுதி, பண்ணையாளர் ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதி, ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் தங்கும் விடுதிகள் ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், உயிர் தொழில்நுட்ப பிரிவுகள், கால்நடை இனப் பெருக்கம் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுடன் கூடிய ஆராய்ச்சி வளாகம், தொழில் துவக்கம் மற்றும் ஒருங்கிணைந்த தகவல் மைய வளாகம், பசுந்தீவன ஆராய்ச்சி வளாகம், பொதுமக்கள் கலந்துரையாடும் பகுதி, இறைச்சிக்கூடம் மற்றும் பதப்படுத்துதல் வளாகம் ஆகிய வளாகங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆராய்ச்சி நிலையத்திற்கான கட்டமைப்பு பணிகள் நபார்டு தேசிய வேளாண் வளர்ச்சி வங்கி மூலம் 447.05 கோடி ரூபாய் கடனுதவி பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையத்திற்கென தேவையான கால்நடைகள், உபகரணங்கள், மருந்து பொருட்கள் மற்றும் இதர செலவினங்கள் ஆகியவற்றிற்கு போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாராய்ச்சி நிலையத்திற்கென 28.50 கோடி ரூபாய் செலவில் 110/22 கி.வோ. துணை மின்நிலையம் அமைக்கப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19.05.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்நிலையத்தின் பல்வேறு பிரிவுகளின் தேவைக்கான குடிநீரை வழங்க 262.16 கோடி ரூபாய் செலவில் சிறப்பு குடிநீர் வழங்கல் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு காவிரி ஆற்றிலிருந்து சேலம் மாவட்டம், கூடக்கல் கிராமத்தில் தண்ணீர் எடுக்கப்பட்டு பல்வேறு நீரேற்று நிலையங்கள் மூலமாக 156 கி.மீ தூரத்திற்கு குழாய்கள் மூலம் நீர் கொண்டு வரப்பட்டு, நாளொன்றுக்கு சுமார் ஒரு கோடி லிட்டர் தண்ணீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் சுமார் 70 உயர்தர நாட்டின பசுக்கள், 500க்கும் மேற்பட்ட மேம்படுத்தப்பட்ட செம்மறி மற்றும் வெள்ளாட்டு குட்டிகள், 500 வெண்பன்றி குட்டிகள், 20 லட்சம் நாட்டுக்கோழி குஞ்சுகள் மற்றும் 20 லட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், நாட்டின பசுக்கள், ஆடுகள், கோழி இனங்கள் அழியாமல் பாதுகாக்கப்படுவதோடு, பண்ணையாளர்கள் பல்வேறு நவீன தொழில்நுட்பங்களை அறிந்து கால்நடைகளின் உற்பத்தி திறனை பெருக்கி, குறைந்த செலவில் தரமான பால், முட்டை மற்றும் இறைச்சி பொருட்கள் உற்பத்தி செய்ய இயலும்.

மேலும், கால்நடைப் பண்ணைகள் சார்ந்த தொழிலினை தொடங்க விழையும் தொழில் முனைவோருக்குத் தேவையான தகவல்கள் மற்றும் பயிற்சி பெற வாய்ப்புகள் அமையும். அத்துடன், ஆராய்ச்சி நிலையத்தில் வழங்கப்படும் திறன் மேம்பாட்டு பயிற்சி மூலம் ஆண்டுதோறும் 3,000 இளைஞர்கள் பயிற்சி பெற்று சிறந்த வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரதா சாகு, தலைவாசல் கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் க.கிருஷ்ணகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக சேலம் மாவட்டத்திலிருந்து சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தே. மலையரசன், டி.எம்.செல்வகணபதி, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் மரு. பாரதி, சேலம் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர்.இளங்கோ, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகராட்சி அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் மதுரை கிழக்கு, திருப்பரங்குன்றம், மதுரை வடக்கு, மதுரை தெற்கு சட்டமன்றத் தொகுதிகளில் புதிய பாதாளச் சாக்கடை திட்டப் பணிகளுக்கு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (12.01.2025) அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் தலைமை வகித்தனர். சட்டமன்ற உறுப்பினர்கள் தளபதி, பூமிநாதன், மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த், துணை மேயர் தி.நாகராஜன், நகராட்சி நிர்வாக இயக்குனர் சிவராசு, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மா.சௌ.சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் ச.தினேஷ்குமார், மண்டலத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடன் உள்ளனர்.